Registered as a Newspaper

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 09 | 23-03-2003 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 33

தரமான முறையில் படப்பிடிப்புக்களுக்கு நாடவேண்டிய இடம்

தாசன் போட்டோ அன் வீடியோ

பிரதான வீதி, இராமநாதபுரம், கிளிநொச்சி.

(கி-7802)

### சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும்

# விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கான பாதுகாப்பு வழங்கிய அதிகாரி பதவி நீக்கம்!

## பிரதமரின் பணிப்புரையில் நடவடிக்கை

(கொழும்பு)

**சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்த கொள்ளும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவது தொடர்பாகக் கடமையாற்றி வந்த முன்னாள் விங்கொமாண்டர் ராஜா விக்கிரமசிங்க அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.**

சமாதானச் செயலகத்தில் பிரதான இணைப்பதிகாரியாக கடமையாற்றிய அவர் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பேரிலேயே பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

சமாதான செயலகத்தின் பிரதி இணைப்பதிகாரியான ரியல் அட்மிரல் திசநாயக்கவிடம் இந்தப் பொறுப்புக்களை ஒப்படைக்கும் படியும் பிரதமர் அறிவுறுத்தியுள்ளார். சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் தொடர்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளுக்கு அமெ.அமைச்சர் வரவேற்பு

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் சமாதான முயற்சியினை அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா றொக்கா வரவேற்றுள்ளார்.

கலிபோர்னியாவில் நடைபெற்ற ஆசிய பசுபிக் நாடுகளின் சர்வதேச உபகுழுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். விடுதலைப்புலிகள் வன்முறையினைக் கைவிட்டு விட்டதாக உறுதியளித்தால் அவர்கள் மீதான தடையினை அமெரிக்கா நீக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். இலங்கைக்கு 19.5 மில்லியன் டொலர்களை உதவியாக அமெரிக்கா வழங்கி இருக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அம்பாறையில் தமிழர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் கூட்டம் நேற்று அம்பாறையில் நடைபெற்றுள்ளது. மட்டு - அம்பாறை சிறப் புத்தளபதி ரமேஸ் தலைமையிலான குழு நேற்று அம்பாறை கல்முனைக்குச் சென்று கல்வித் துறை சார்ந்தோர் மற்றும் பல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது. கல்முனை பாத்திமா கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் சிறப்புத்தளபதி ரமேஸ் உரையாற்றுகையில்: அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களும் தமிழ் மக்களும் ஒற்றுமையாக இருப்பதன் மூலமே எமது சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

## பெற்றோல் தீப்பிடித்து எரிந்து வியாபார நிலையம், வீடு நாசம்

### உரிமையாளர் பலத்த காயம்!

(அலுவலக செய்தியாளர்)

வியாபார நிலையத்தினுள் பாதுகாப்பற்ற நிலையில் இருந்த பெற்றோலில் தீப்பிடித்ததில் வியாபார நிலையமும் வீடும் முற்றாக எரிந்து நாசமாகியதுடன் வியாபார நிலைய உரிமையாளர் பலத்த எரிகாயங்களுக்குள்ளான நிலையில் கிளி. மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் – முஸ். பிரதிநிதிகள் மட்டக்களப்பில் 27இல் சந்திப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள இச்சந்திப்பு மட்டக்களப்பு மாவட்ட போர் சூனியப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் வவுணத்தீவு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை சர்வதேச யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழு மேற்கொண்டு வருகின்றது.

கடந்த 12ஆம் திகதி விடுதலைப்புலிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற இருந்த போதும் சர்வதேச கடற்பரப்பில் விடுத

(08 ஆம் பக்கம் பார்க்க)

### சீன மீன்பிடிக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டபோது

## எமது சண்டைப் படகுகள் எவையும் அக்கடற்பரப்பில் இருக்கவில்லை!

### கண்காணிப்புக் குழுவிற்கு புலிகள் தெரிவிப்பு

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடந்த வியாழன் இரவு மீன்பிடி இழுவைக் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட வேளை, கடற்புலிகளின் எந்தவொரு சண்டைப் படகும் அப்பகுதியில் இருக்கவில்லை என கடற்புலிகள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு அறிவித்துள்ளனர்.

அத்துடன் அச்சம்பவத்திற்கும், தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டது தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டிருந்தது.

## ஈராக்கிய தெற்கு நகர் பஸ்ரா அமெ. படைகளிடம் வீழ்ச்சி?


(லண்டன்)

குவைத் எல்லையிலிருந்து ஈராக்கின் தெற்குப் பகுதியூடாக வடக்கே பாக்தாத்தை நோக்கி முன்னேறிவரும் அமெரிக்க மற்றும் பிரித்தானிய படையினர் ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான பஸ்ராவைச் சென்றடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாக்தாத் நகருக்கான பாதையிலுள்ள சில பாலங்களையும் கூட்டுப்படையினர் கைப்பற்றியுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

இதேவேளை பஸ்ரா நகரில் சில பகுதிகளில் இப்போதும் மோதல் நடைபெற்றுவருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஈராக் தலைநகர் பாக்தாத் மீது நேற்றுக்காலை அமெரிக்காவின் எவ்-14, எவ்-18 யுத்த விமானங்கள் தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தின. அத்துடன் 300குறூஸ் ஏவுகணைகள் பாக்தாத் நகரம் மீது ஏவப்பட்டுள்ளன. இதனால் பாக்தாத் அதிர்ந்து கொண்டிருந்ததாக செய்திகள் தெரிவித்தன. யுத்தம் தொடங்கி முதல் 24 மணிநேரங்களில் 1500க்கு மேற்பட்ட செய்மதி வழிகாட்டிக் குண்டுகள் இவ் விமானங்களால் வீசப்பட்டுள்ளன. இவ் விமானங்கள் இரு விமானம் தாங்கிக் கப்பல்களிலிருந்து புறப்பட்டுச் சென்றன. இத் தாக்குதல்களில் 200 ஈராக்கிய பொதுமக்கள் காயமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது.



AFP

ஈராக்கிய அதிபர் சதாமின் மாளிகை வளாகப்பகுதி தீப்பிடித்து எரிகிறது

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

இராமன் ஞானசேகரம் என்பவருடைய தேசியஅடையாள அட்டை(இல-622672510V) கிளிநொச்சி நகரப்பகுதியில் தவறிவிட்டது. தயவு செய்து இதைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு அறியத்தரவும். இராமன் ஞானசேகரம் இல-12, முத்துமணி பல்பொருள் வாணிபம், கிளிநொச்சி. (3036)

### தவறிவிட்டது

சுந்தரமூர்த்தி திருமூர்த்தி என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (770290210X) University I.Cயுடன்(சிவப்பு நிறம்) 21.03.2003 அன்று ஜெயபுரத்தில் இருந்து பேருந்தில் பிரயாணம் செய்யும் போது தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கிளிநொச்சி, ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.(3040)

### உயர்கல்வி வாய்ப்பு

கனடா நாட்டின் ரொறொன்ரோ நகரில் கம்பியூட்டர், முகாமைத்துவம் என்பவற்றில் உயர் கல்விக்கான வாய்ப்புக்கள். A/L இல் சித்தி போதுமானது. விபரங்களுக்கு: 140, பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொலை.பே.இல. 2222478. (3026)

## கற்றல் உபகரணம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் முரசுமோட்டை அ.த.க. பாடசாலையில் கல்விகற்கும் வறுமைக்குட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

முரசுமோட்டை வலயப் பொறுப்பாளர் அ.கரிகாலனின் ஒழுங்குபடுத்தலில் மேற்படி கற்றல் உபகரணங்கள் மாணவர் களுக்கு நேற்று முன்தினம் பாடசாலையில் வைத்து வழங்கப்பட்டது.

இவ்வைபவத்தில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(சோ)

## த.பொ.மே.நிறுவன ஏற்பாட்டில்
# அம்பலாந்துறையில் உழவர் விழா

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் உழவர் விழா இன்று பிற்பகல் மூன்று மணிக்கு அம்பலாந்துறை பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மட்டு.அம்பாறை மாவட்ட பொருண்மியப் பொறுப்பாளர் நிஷாம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ், மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மட்டக்களப்பு அரச அதிபர் மௌனகுருசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறப்பு அதிதிகளாக மாவடி முன்மாரிக் கோட்ட இராணுவத் தளபதி ராம், தளபதி பிரமா, வினோதன் படையணித் தளபதி தாத்தா உட்பட அரச திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## வீடுகளை அமைக்க நடவடிக்கை

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் இராணுவ நடவடிக்கைகளால் அழிக்கப்பட்ட வீடுகளில் ஒரு பகுதியை அமைத்துக் கொடுக்க ஜி.ரி.சற் நிறுவனம் முன்வந்துள்ளது.

175 வீடுகளை இந்த நிறுவனம் அமைத்துக் கொடுக்கவுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதற்கான நடவடிக்கைகள் இன்னும் சில மாதங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (11)

# உயிரியல் விஞ்ஞானத்துறைக்கு மேலும் ஒன்பது பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞானத்துறைக்கு மூன்றாவது தடவையாக வெற்றிடங்கள் நிரப்புவதற்காக ஒன்பது மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் பெயர் விபரங்களைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

கே.பிரதீஜா, ஏ.ஈ.எஸ்.பற்றிக், எஸ்.சிவதாசன், எஸ்.கார்த்திகா, ஆர்.இளங்குமரன், எஸ்.பற்குணராஜா, ரி.துளசிதா, ரி.ரமணன், எஸ்.கௌசாங்கன் ஆகியோரும், விஞ்ஞான விவசாயத்திற்கு எல்.சி.நிலானியும் தெரிவாகியுள்ளனர்.

விரிவுரைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் மாணவர்களைப் "பரீட்சைகளும் அனுமதிகளும்" கிளையுடன் தொடர்பு கொண்டு உடன் விரிவுரைகளுக்குச் செல்லுமாறு பதிவாளர் அறிவித்துள்ளார்.

## முக்கிய அறிவித்தல்

### வலுவிழந்தவர்களுக்கு வீடமைப்புப் புனர்வாழ்வு வசதிகள்

வன்னிப் பெருநிலப்பரப்பில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு, மடுக்கோவில், வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களிலுள்ள சகல வலுவிழந்தவர்களினதும் விபரங்களைத் திரட்டி, அவர்களுக்கு பொருந்தக்கூடிய மறுவாழ்வு வசதிகளையும், வீடமைப்பு மற்றும் குடியிருக்கும் வீடுகளில் திருத்த மேம்பாடுகளையும் மேற்கொள்ளும் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு அவர்களின் நலன்களில் அக்கறையுடன் செயற்பட்டுவரும் வெண்புறா நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இத்திட்டத்திற்கான நிதியுதவிகளையும், பயிற்சித் திட்டங்களையும் வழங்கி இப்பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அரச, அரச்சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்ததுடன் இதற்குரிய விண்ணப்பங்களையும் கோரியுள்ளன.

எனவே இத்திட்டத்தின் முதன்மைப்பணியாக, பயனாளிகள் தெரிவு நடைபெறவுள்ளது. இத்தெரிவானது முல்லைத்தீவு, நெடுங்கேணி, மாங்குளம், கனகராயன்குளம், பனங்காமம், ஆண்டான்குளம்,பூநகரி, பளை, தாளையடி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் அமைந்துள்ள எமது கண்ணிவெடி விழிப்புணர்வுத் தொடர்பகங்களிலும்,புதுக்குடியிப்பு கைவேலியிலுள்ள எமது கிளை நிறுவனத்திலும் பங்குனி முதலாம் திகதி தொடக்கம் நடைபெற்றுகொண்டிருக்கின்றன. ஆகையால் அவ்வப்பகுதியிலுள்ள உடல்ரீதியாக வலுவிழந்தோர் யாவரும் தமக்கு அருகிலுள்ள வெண்புறா கண்ணிவெடி விழிப்புணர்வு தொடர்பகங்களுக்குச் சென்று பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். வலுவிழந்த குடும்பத்தின் தலைவர் அல்லது தலைவி தனது அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், குடும்பஅட்டை முதலியவற்றுடன் தமக்கருகாமையிலுள்ள எமது தொடர்பகங்களில் தவறாது குறிப்பிட்ட காலஎல்லைக்குள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். குடும்பஅட்டை கொண்டுசெல்லாதோரின் பதிவுகள் நிச்சயம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அத்துடன் இவ்விதமான பதிவுகளைச் செய்து கொள்ளாதவர்கள் எமது திட்டத்தின் மூலம் கிடைக்கவிருக்கும் உதவிகளுக்கு உரித்துடையவர்களாகமாட்டார்கள் என்பதையும் கவனத்தில் கொண்டுவர விரும்புகின்றோம். வீடமைப்பு வசதிகளைப் பெற விரும்புபவர்கள் தங்கள் பெயரில் வீடமைப்பதற்கான காணியை வைத்திருப்பவராக இருத்தல் அவசியம்.

வீடமைப்பு, விவசாயம், கால்நடைவளர்ப்பு, கல்வி வசதிகள், வர்த்தக முயற்சி, குடிசைக்கைத்தொழில், நன்னீர் மீன்பிடிப்பு மற்றும் பல வருமான அதிகரிப்புத் திட்டங்களை உள்ளடக்கியதாக இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. எனவே ஆர்வமுடைய வலுவிழந்தோர் யாவரையும் தேவையான ஆவணங்களுடன் அருகாமையிலுள்ள எமது தொடர்பகங்களில் தங்கள் பதிவுகளை இம்மாத இறுதிக்குள் செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**வெண்புறா நிறுவனம்**

(சி-8032)

## மரண அறிவித்தல்

### அமரர் மூத்ததம்பி குணசிங்கம்

குமரபுரம், பரந்தனை வதிவிடமாகக் கொண்ட மூத்ததம்பி குணசிங்கம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற மூத்ததம்பி - மனோன்மணியின் மூத்த மகனும் வரலட்சுமியின் அன்புக்கணவரும், ரஜனி (பிரான்ஸ்), நளினி (நோர்வே), ரமணன் (பிரான்ஸ்), சுமணன் (கனடா), சுகனி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் தயாளமித்திரன், ரவீந்திரன், தயா, லாமினி, சிவபாலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மெலிஷா, மெல்வின், மெதுஷா, கட்வின், கத்திலியா, கரணியா, கஜீனா, கஜனி, சுஜிதா ஆகியோரின் அன்புப் பேரனும் பரிமளம், பாலன், மனோ, ஜெயா, வதனி, பாமா,ஜெயந்தன், சோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-03-03 இன்று காலை 10.00 மணிக்கு இலக்கம் 132, குமரபுரம், பரந்தனில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரிகைகளுக்காகப் பூதவுடல் பரந்தன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: **க.தம்பிஐயா (சித்தப்பா)**

(3041)

# தமிழீழப் போக்கு வரவுக் கழகம்
## பருவகாலச் சீட்டு வழங்கல்

| இடம் | நாள் | நேரம் | வழங்கும் இடம் |
|---|---|---|---|
| பளை (முகமாலை) | 25-03-2003 -31-03-2003 | காலை 8.30-பகல் 3.00 | த.போ.க. பளைப் பணியகம். |
| கிளிநொச்சி | 25-03-2003 -31-03-2003 | காலை 8.30-பகல் 3.00 | த.போ.க. கிளிநொச்சிப் பணியகம். |
| பூநகரி | 25-03-2003 -28-03-2003 | காலை 9.00-பகல் 3.00 | உதவி அரசாங்க அதிபர் பணியகம். |
| விசுவமடு | 25-03-2003 -28-03-2003 | காலை 8.30-பகல் 3.00 | பாண்டியன் நடுவப்பணியகம்-விசுவமடு. |
| புதுக்குடியிருப்பு | 25-03-2003 -31-03-2003 | காலை 8.30-பகல் 3.00 | த.போ.க. புதுக்குடியிருப்புப் பணியகம். |
| முல்லைத்தீவு | 25-03-2003 -31-03-2003 | காலை 8.30-பகல் 3.00 | பேருந்து நிலையம். |

குறிப்பு:- **குறித்த நாளில், நேரத்தில் பருவகாலச் சீட்டு வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.**

(சி-8033)

**முகாமையாளர்,**
**தமிழீழப் போக்குவரவுக்கழகம்,**
**நடுவப்பணிமனை, விசுவமடு.**

# ஈராக் மீது வரலாறு காணாத வான்தாக்குதல்

# பாக்தாத் நோக்கி முன்னேறியுள்ளதாக அறிவிப்பு

## எண்ணெய் வயல்களுக்கு ஈராக் தீவைப்பு

**ஈராக் மீதான போர் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. தலைநகரான பாக்தாத் மீது அமெரிக்கப் பிரிட்டிஷ் கூட்டுப்படைகள் கடுமையான வரலாறு காணாத வான்தாக்குதல்களை நடத்தியதுடன் தரைப்படைகளும் பாக்தாத்தை நோக்கி ஈராக்கிய பகுதிக்குள் 160 கிலோமீற்றர் தூரம் வரை முன்னேறியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.**


ஈராக்கின் வடபகுதியிலுள்ள மொசூல் மற்றும் ஹிர்குக் நகரங்களின் இராணுவ இலக்குகள் மீது அமெரிக்கப்போர் விமானங்கள் குண்டுகளை வீசியுள்ளதாக அமெரிக்கத்தரப்பு அறிவித்துள்ளது.

போர் வரலாற்றில் இதுவரை நடைபெறாத அளவிற்குவான் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகப் போர்முனைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இத்தாக்குதலின் போது ஈராக்கின் வான் பாதுகாப்புப்படையும் பதிலடி கொடுத்துள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன. ஈராக்கின் மேற்குப் பகுதியில் யோடான் மற்றும் இஸ்ரேலுக்கு மிகவும் நெருக்கமான தொலைவிலுள்ள இரண்டு முக்கியமான ஈராக்கிய விமானத் தளங்களை கூட்டணிப்படைகள் கைப்பற்றியுள்ளதாக கூட்டுப்படைகள் அறிவித்துள்ளன.

உம்மாஹசர் துறைமுக நகரமும் றம்மாளையா நகரின் எண்ணெய் வயல்களையும் அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் கைப்பற்றியுள்ளதாகவும் ஈராக்கியர் தீ வைத்த 10 எண்ணெய் வயல்களில் தீ கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை அமெரிக்கா ஈராக் மீதான யுத்தத்திற்கு "அதிர்ச்சி அச்சுறுத்தல்" என பெயர் சூட்டியுள்ளது.

1991 ஆம் ஆண்டு நடைபெற்ற வளைகுடா யுத்தத்திற்கு "பாலைவனப்புயல்" என பெயர் சூட்டிய அமெரிக்கப் படைத் தலைமையகம் ஈராக் மீதான இந்த இரண்டாவது யுத்தத்திற்கு "அதிர்ச்சி அச்சுறுத்தல்" என பெயர் சூட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.






ஈராக் மீதான யுத்த நடவடிக்கையிலீடுபட்டுள்ள அமெரிக்காவின் இரண்டு உலங்குவானூர்திகள் வீழ்ந்து நொருங்கியுள்ளன.

இவை இரண்டிலும் 26 அமெரிக்கப் படையினரும் எட்டு பிரிட்டிஷ் படையினரும் பலியாகியுள்ளனர்.

முதல் நாளில் ஈராக் எல்லைக்குள் ஒரு உலங்குவானூர்தியும் இரண்டாம் நாளான நேற்று முன்தினம் குவைத் எல்லைக்குள் ஒரு உலங்குவானூர்தியும் வீழ்ந்து நொருங்கியுள்ளன.

குவைத்தில் வீழ்ந்து நொருங்கியது போன்ற சி.எச்.48 ரக உலங்குவானூர்தியும் அதன் மேல், முன்புற, பக்கத் தோற்றங்களும்.

## ஈராக்கிற்கு அடுத்தது வடகொரியா

# பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண புதிய சீனப் பிரதமர் புஷ்சிடம் வலியுறுத்து

வடகொரியப் பிரச்சினையை பேச்சுவார்த்தைகள் மூலமாகவே தீர்க்கவேண்டுமெனச்சீனாவின் புதிய சனாதிபதி ஹீஜிண்டாவோ கூறியுள்ளார். அவசர தீர்மானங்கள் எதனையும் எந்தவொரு நாடும் எடுக்கக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவும் வடகொரியாவும் நேரடிப்பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டுமெனவும் வடகொரியா மீது திடீர் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படுமானால் அது பிராந்தியத்தில் யத்தில் பதற்றத்தை அதிகரிக்க வழிகோலும் என்றும் சீனப் பிரதமர் அமெரிக்க சனாதிபதியுடன் தொலைபேசியில் உரையாடுகையில் கூறியுள்ளார்.

இதேவேளை, எமது ராடர்கள் அனைத்தும் ஈராக்கை நோக்கி திருப்பப்பட்டிருப்பினும் அதன் திரைகளில் வடகொரியாவையும் நாம் அவதானித்துக் கொண்டேயுள்ளோம். வட. கொரியா மேலும் ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபடக்கூடாது என அமெரிக்க ராஜாங்க செயலாளர் கொலின் பவல் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வடகொரியாவோ இன்று அணுவாயுத வல்லமை கொண்டுள்ளதுடன் அமெரிக்காவுக்கே சவால் விட்டு வருகின்றது.

ஈராக்கை அடுத்து அமெரிக்காவின் கவனம் வடகொரியா மீது திரும்பவுள்ளதாக ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றமையினால்.சீன சனாதிபதியின் கருத்து முக்கியத்துவம் பெறுகின்றது.

## ஈராக்கின் சொத்துக்களை முடக்க திறைசேரிக்கு புஷ் உத்தரவு

அமெரிக்காவில் ஈராக்கிய அரசுக்குச் சொந்தமான இராஜதந்திர விவகாரங்களுடன் சம்பந்தமில்லாத அனைத்துச சொத்துக்களையும் முடக்குமாறு திறைசேரி அமைச்சர் அறிவித்துள்ளார்.

இச்சொத்துக்களை பறிமுதல் செய்யுமாறு சனாதிபதி புஷ் நிறைவேற்றுக் கட்டளையை விடுத்துள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

ஈராக்கிய அரசின் அனைத்துச் சொத்துக்களையும் முடக்குமாறு அமெரிக்க அரசு ஏனைய நாடுகளைக் கேட்டுக்கொண்டுள்ளது

## நிமோனியாவை ஏற்படுத்தும் வைரசால் அமெரிக்காவில் 22 பேர் பாதிப்பு

அமெரிக்காவில் நிமோனியா நோயைப் பரப்பும் ஒருவித வைரஸ் கிருமிகள் பரவிவருவதாக அந்நாட்டு சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் இது வரை 22 பேர் இந்நோயிற்கு உள்ளாகியதாக தெரியவருகின்றது.

## பலஸ்தீன - இஸ்ரேல் பிரச்சினை தீர்வு பின்தள்ளப்படக்கூடாது

### - ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை

பலஸ்தீன, இஸ்ரேலியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் திட்டங்கள் எதுவும் மத்திய கிழக்கு யுத்தநிலைமை காரணமாகப் பின்தள்ளிப் போடக் கூடாது என ஐரோப்பிய ஒன்றியம் எச்சரித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சர்கள் மாநாடு பிரேசிலில் நடந்ததன் பின்னர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈராக் மீது யுத்தம் மேற்கொள்ளப்படவிருப்பது தொடர்பாக பிரிந்து நிற்கும் ஐரோப்பிய ஒன்றியம், பலஸ்தீன பிரச்சினைக்கு உடன் தீர்வுகாண வேண்டுமென ஒத்தகருத்தில் இருக்கிறது. பலஸ்தீன பிரச்சினை தீர்க்கப்படுமானால் மத்திய கிழக்கில் நிலையான சமாதானத்திற்கு அது வழிவகுக்குமென ஐரோப்பிய நாடுகள் உறுதியாக நம்பியிருக்கின்றன.

## ஆப்கானில் அமெ.நிலைகள் மீது தொடர் எறிகணை வீச்சு


கிழக்கு ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்கப் படைகள் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது, ஆப்கான் முன்னாள் ஆட்சியாளர்களான தலிபான் அமைப்பினருக்கும் அவர்களது நண்பர்களான அல்கைதா அமைப்பினருக்கும் எதிராக அமெரிக்கப் படைகள் தொடர்ச்சியான பெரும் நடவடிக்கையை மேற்கொண்ட போது இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

வெவ்வேறு மூன்று அமெரிக்க நிலைகள் மீது குறைந்தது 12 ஏவுகணைகள் வீசப்பட்டுள்ளன. கடந்த பல மாதங்களுடன் ஒப்பிடுகையில் ஒரே இரவில் அதிக எண்ணிக்கையிலான ஏவுகணைகள் தாக்கிய சம்பவம் இது வென அமெரிக்க இராணுவப் பேச்சாளர் கூறியுள்ளார்.

## ஆப்கானில் இந்தியத்தூதரகம்

23 வருட காலத்திற்குப் பின்னர் இந்தியா அதன் தூதரகமொன்றை ஆப்கானிஸ்தான் கந்தஹாரில் திறந்து வைத்துள்ளது. ஆப்கானிஸ்தானுக்கான இந்தியத் தூதுவராக விவேக் தாஜீ நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதன் பின்னர் இரு நாடுகளுக்குமிடையே நட்புறவு மேலும் விருத்தியடையும் என இருநாடுகளும் கருத்துத் தெரிவித்துள்ளன.



ஈராக்கின் ஏவுகணைகள் ஏதாவது வானில் தென்படுகிறதா? என இஸ்ரேலிய டெல்அவிவ் நகர உயர்ந்த கட்டடமொன்றிலிருந்து அவதானித்துக் கொண்டிருக்கும் இரு இஸ்ரேலியப் பொலிசார்.




யுத்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அமெரிக்கக் கவச வாகனப்படை



கனரக ஆயுதங்கள், வெடிப்பொருட்களை ஏற்றி இறக்கும் சி.எச்.-53ஈ. அமெரிக்க உலங்குவானூர்தி



ஈராக் மீதான யுத்தத்தையடுத்து சீனாவிலுள்ள அமெரிக்க பிரிட்டிஷ் தூதரகங்களுக்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.



வானிலிருந்து தரைக்கு ஏவப்படும் ஏ.ஜி.எம்.-65 மாவெறிக் ஏவுகணை அமெரிக்க யுத்தவிமானமொன்றிலிருந்து ஏவப்படுகிறது.

# தடுமாற்றத்தில் பந்தயக்காரர்கள்

இன்று நடைபெறுகின்ற உலகக் கிண்ணக்கிரிக்கெட் இறுதிப் போட்டியில் தங்கள் அணிதான் கிண்ணத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற கனவுடன் பெரும் பதட்டம் அடைந்திருக்கும் இரு நாட்டு ரசிகர்களின் ஆவலுக்கு மத்தியில் கடந்தகால அவதானிப்பின் அடிப்படையில் அவுஸ்திரேலிய அணியே உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றும் என்ற தன்நம்பிக்கையுடன் பெரும் தொகைப் பணத்தைக் கொட்டி பந்தயம் கட்டியவர் களை ஒரு தடுமாற்றமான/ குழப்பமான நிலையை அடைய வைத்துள்ளது.

இந்திய அணியின் அண்மைய வளர்ச்சிப்போக்கே மேற்படி அவர்களை இத்தகைய நிலைக்குத் தள்ளியுள்ளது என்றேசொல்ல இடமுண்டு.

உலகக்கிண்ணப் போட்டிகள் ஆரம்பமாவதற்கு முன்னர் பெரும் பின்னடைவான நிலையில் காணப்பட்ட இந்திய அணி தற்போதைய இப்போட்டித் தொடரில் தொடர்ச்சியான எட்டு வெற்றிகளைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

அத்துடன்,இவ் எட்டு வெற்றி களும் வெளிநாட்டு ஆடுகளமொன்றில் பெறப்பட்டமையும், இவ்வெற்றிகளுக்கு அணிவீரர்களின் ஒட்டுமொத்த உழைப்பும் இருந்தமையே மேற்படி பந்தயக்காரர்களைக் குழப்பமடைய வைத்ததெனலாம்.



ஏனெனில் கடந்த காலங்களில் அவர்கள் அடைந்த தோல்விகள் ஒரு புறமிருக்க கடந்த காலங்களில் அவ்வணியின் வெற்றிகள் பெரும் பாலும் துடுப்பாட்டத்தின் மூலமே தீர்மானிப்பவையாக இருந்தது. அத்துடன், கிரிக்கெட்டின் நாயகன் என வர்ணிக்கப்படும் சச்சின் டெண்டுல்கரை சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டம் இழக்க வைத்தால் போதும்' வெற்றி எதிரணிகளுக்கு என்ற நிலையே அக்காலங்களில் காணப்பட்டு வந்தது.

ஆனால், இன்று அந்த நிலை மாறி, தலைமையின் சிறப்பான வழி நடத்தல், திறமையான பந்து வீச்சு, களத்தடுப்பு போன்றனவும் துடுப்பாட்டத்துடன் சேர்ந்து மேற்படி எட்டுத் தொடர்ச்சியான வெற்றிகள் பெறப்பட்டமை இம் மாற்றத்திற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

இந்த வகையில்,எந்த நாடு, எந்த ஆடுகளம் என்பதற்கு அப்பால் எந்தச் சவால்களையும் எதிர்கொண்டு வெற்றி என்ற இலக்கை அடைய இறுதிவரை போராடக் கூடிய ஒரு தலைமையை இந்திய அணி பெற்றுள்ளது.

அத்துடன், பந்துவீச்சைப் பொறுத்தமட்டில் சிறிநாத் சிறப்பாகப் பந்துவீசி வருகின்றார். அவர் தன்னுடைய கடந்தகால அனுபவங்களை வெளிப்படுத்தும் ஒரு களமாக உலகக்கிண்ணத் தொடரை பயன்படுத்தி வருகின்றார்.

அடுத்து நெகேரா, சகீர்கான் ஆகியோரின் இளமைத் துடிப்பான பந்துவீச்சு எதிரணிகளைத் திணறடிக்கும் வகையில் அமைந்து வருகின்றது.

மேலும், ஒரு போட்டித்தொடரில் பந்து வீச்சாளர்களுக்கு அதிக ஆட்ட நாயகன் விருது வழங்கப் பட்டமை இந்திய அணியைப் பொறுத்தவரையில் இதுவே முதல் தடவையாகும்.

களத்தடுப்பைப் பொறுத்தமட்டில் அனைவரும் சிறப்பாகவே ஈடுபட்டு வருகின்றனர். இதில் குறிப்பாக யுவராஜ் சிங்,மற்றும் கைப் ஆகியோரின் களத்தடுப்பு உலகின் முன்னணிக் களத்தடுப்பாளர்களுடன் ஒப்பிடும் அளவுக்கு சிறப்பாகச்செயற்பட்டு வருகின்றனர்.



துடுப்பாட்டத்தைப் பொறுத்தமட்டில், இந்திய அணியின் உச்ச பலமே அதுதான் அத்துடன், இந்திய அணியின் நம்பிக்கை நாயகன் சச்சின் கடந்த போட்டிகளில் ஆடியது போன்று இவ் இறுதிப் போட்டியில் ஆடுவாரேயானால் வெற்றிதோல்வி யார் பக்கம் என்று சொல்லிவிட முடியாத நிலை ஏற்படும் என்றே கருதப்படுகிறது.

இந்த நிலையில், மேற்படி பந்தயக் காரர்கள் குழப்பமடைய இந்திய அணியின் வளர்ச்சிப் போக்கும் ஒரு புறம் இருக்க, அவுஸ்திரேலிய அணியின் தொடர்ச்சியான 16 வெற்றிகளும் அவர்களைப் பீதியடைய வைத்துள்ளது.

ஏனெனில், 17 ஆவது வெற்றி என்பது அவர்களால் எட்ட முடியாததொன்றாகக் கருதப்படும் அதே வேளை, இந்திய அணிக்கு எதிராக இவ் வெற்றி பெறப்படுவது என்பது சுலபமான காரியமாக இருக்கப் போவதில்லை என்றும் பந்தயக்காரர்கள் அச்சமடைகின்றனர்.

அவர்கள் அச்சமடைய முக்கிய காரணம் என்னவெனில், அவுஸ்திரேலிய அணியின் தொடர்ச்சியான 17 டெஸ்ட் வெற்றிகளைத் தடுத்து நிறுத்தியது கங்குலி தலைமையிலான இந்திய அணியே.

எனவே, இந்திய அணிக்கு முன்னாள் இரண்டு பெரும் சவால்கள் இருக்கின்றன. இதில் ஒன்று உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் வெற்றிகொள்வது மட்டுமல்ல, அத்துடன் அவுஸ்திரேலிய அணியின் தொடர்ச்சியான வெற்றிகளைத் தடுத்து நிறுத்த வேண்டிய ஒரு நிலையிலும் உள்ளது.

இந்நிலையில், அவுஸ்திரேலிய அணியின் வெற்றிப் பயணம் தொடருமா? அன்றி இந்திய அணியின் தற்போதைய வளர்ச்சிப் போக்கு மேலும் வலுவடையுமா? இதுவே பந்தயக்காரர்களின் தற்போதைய குழப்பத்திற்கு முக்கிய காரணமாகும்.

இந்த வகையில் எந்த அணி வெற்றி கொள்ளுமோ, இல்லையோ போட்டியின் இறுதிப் பந்து வரை பரபரப்பாக அமையும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

சுபானந்

# உலகக்கிண்ணத்தைக் குறிவைத்து இந்திய - அவுஸ்.அணிகள் களத்தில்

உலகமே ஆவலுடன் எதிர் பார்த்திருந்த 8ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறவுள்ள இறுதியாட்டத்துடன் முடிவுக்கு வருகிறது.இதில் பொன்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணியும் கங்குலி தலைமையிலான இந்திய அணியும் ஒன்றை ஒன்று எதிர்த்தாடுகின்றன.

அவுஸ்திரேலிய அணி அரையிறுதிப் போட்டியில் சிறிலங்கா அணியைத் தோற்கடித்ததன் மூலம் இவ்வாய்ப்பை பெற இந்திய அணியோ முதல் தடவையாக அரையிறுதிவரை முன்னேறிய கென்ய அணியைத் தோற்கடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

இதன் மூலம் அவுஸ்திரேலிய அணி உலகக்கிண்ண இறுதிப் போட்டி வாய்ப்பை ஐந்தாவது தடவையாகப் பெற்றுள்ளது. இதில் இரண்டு தடவைகள் (1987, 1999) கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது. இந்திய அணியோ இறுதிப் போட்டி வாய்ப்பை இருபது வருடத்தின் பின் இரண்டாவது தடவையாக அடைந்துள்ளது. அதன் முதல் இறுதிப் போட்டி வாய்ப்பில் உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது. 1983 கபில்தேவ் தலைமையிலான அணியால் அது பெறப்பட்டது. அதன் பிற்பாடு கங்குலி தலைமையிலான அணி இவ்வாய்ப்பைப் பெற்றுள்ளது. இவ் அணி இம்முறை கிண்ணத்தைக் கைப்பற்றி இரண்டு தடவைகள் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய அணிகளின் வரிசையில் இணையுமா? அன்றேல் அவுஸ்திரேலிய அணி மூன்றாவது தடவையாகக் கிண்ணத்தைக் கைப்பற்றி சாதனையை நிலைநாட்டுமா?

மேற்படி கருத்துக்கள் வெளியாகிய நிலையில் இரு அணிகளும் வெற்றி பெறுவதற்கான யுக்திகளை வகுத்து வருகின்ற நிலையே தற்போது காணப்படுவதாக கிரிக்கெட் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்திய அணித் தலைவர் கங்குலியோ அரையிறுதிப் போட்டியில் சிறிலங்கா அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர்களை எதிர்கொண்டு ஆட்டம் இழந்தமை பற்றி தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் அது போன்ற நிலையைத் தமது அணி அடைந்து விடாது பாதுகாப்பதற்கான யுக்திகளை அணிவீரர்களுடன் கூடி ஆராய்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலம் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் முதல் 15 ஓவர்கள் வரையிலாவது நின்று நிலைத்து ஓட்டங்களை குவிக்கவேண்டும். அப்போதுதான் அவுஸ்திரேலியாவுக்கு சவால் நிறைந்த போட்டி ஒன்றை வழங்கமுடியும் என்பதில் இந்திய அணி தீவிரமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



இந்நிலையில் தற்போது சமபலத்தைக் கொண்டுள்ள இரு அணிகளும் குறிவைத்துள்ளது உலகக்கிண்ணத்தை. இதனை வெற்றிகொள்ள இரு அணிகளாலும் குறிவைக்கப்படுபவர்கள் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள்.

இந்திய அணியை எடுத்துக் கொண்டால் நட்சத்திர ஆட்டக்காரர் டெண்டுல்கர் களத்தில் நிலைத்திருப்பதை அவுஸ்திரேலியா அனுமதிக்கும் பட்சத்தில் இந்திய அணியின் வெற்றி வாய்ப்பு நிச்சயமானதாகும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர் நிலையில் கிண்ணத்தையும் பெருந்தொகைப் பணத்தையும் வெல்லப்போகும் அணி அவுஸ்திரேலியாவா? இந்தியாவா? இன்று தெரிந்துவிடும்.

# நம்பிக்கையே பலம்

கென்யாவின் கிரிக்கெட் அவ்வளவு பிரபலமான ஆட்டமாக முன்னர் இருந்ததில்லை. அந்நாட்டுக்கு உதைபந்தாட்டத்திலேயே அதிக ஆர்வம் கென்யா சுப்பர்சிக்ஸ் போட்டியில் அயல்நாட்டு அணியான சிம்பாவ்வேயை தோற்கடித்து அரையிறுதிப் போட்டிக்கான வாய்ப்பை எட்டியபோது கென்யதெருக்களில் மகிழ்ச்சி ஆரவாரம் எதுவும் இல்லை. எவரும் பட்டாசு வெடித்துக் கொண்டாடவும் இல்லை. ஆனாலும் கென்யாவில் 1896 இல் இருந்து கிரிக்கெட் ஆடப்பட்டு வருகின்றது.



கென்யாவும் ஒரு காலத்தில் இந்தியா, சிறிலங்கா போன்று பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்தபோது இவ்விதம் கிரிக்கெட் அறிமுகப்படுத்தப்பட்டது. கிரிக்கெட்டில் ஆர்வம் காட்டியவர்கள் கென்யாவில் குடியேறியிருந்த வெள்ளையர்களும் இந்தியர்களுமே. மிக நீண்டகாலம் இவர்களிடையே தான் கிரிக்கெட் போட்டிகள் நடந்து வந்தன. கென்யாவின் கறுப்பர்கள் இதன் பிறகுதான் கிரிக்கெட்டின் பக்கம் சற்று திரும்பினர். இன்னமும் கென்யாவின் தலைநகர் நைரோபியிலும் அதன் சுற்றுவட்டாரங்களிலும் தான் கிரிக்கெட் விளையாடப் படுகின்றது. கென்யாவில் உதைபந்தாட்டத்தில் ஈடுபட்டாலாவது ஏதோ பணம் கிடைக்கும் கிரிக்கெட்டில் ஈடுபடுவர்களுக்கு இவ்விதம் ஊக்குவிப்போ பணமோ இல்லை.

இவை ஒருவாறு இருக்க 2003ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி தொடங்குவதற்கு முன்னர் சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் கென்ய அணியில் இடம்பெற வாய்ப்புள்ள 30 கிரிக்கெட் வீரர்களின் பெயர்களை அறிவிக்கும் படி கோரியது. அனுபவம்மிக்க ஆட்டக்காரர்கள் போதியளவு இல்லாமையால் அப்பட்டியலை தயாரிப்பதில் கென்யாவுக்கு பெரும்பாடு ஏற்பட்டது.

இப்படி உருவான அணிதான் அரையிறுதியில் இந்தியாவைச் சந்தித்தது. கென்யா அரையிறுதிவரை சென்றமைக்கு நம்பிக்கையே காரணம் எனப்படுகின்றது. கடந்த மாதம் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக்கிண்ண தொடக்க விழாவில் கென்யாவின் ஹீரோ கிப் கெய்னோ விசேட விருந்தாளியாக அழைக்கப்பட்டிருந்தார். அவர் கென்ய வீரர்களிடையே பேசும் போது;

ஒருபோதும் தன்னம்பிக்கையை கைவிடாதீர்கள் விளையாட்டில் அது மிக முக்கியம். என்பதை வலியுறுத்தினார் அதுவே கறுப்புத்தங்கங்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது எனக்கூறப்படுகின்றது.

# படையினரின் மிரட்டல்களுக்கு அடிபணியாது

# இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் போராடும் மக்கள்

சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிரானதும் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவானதுமான எழுச்சிகளும், போராட்டங்களும் வடக்கு-கிழக்குப் பகுதியில் இடம்பெற்று வருகின்றன.

முற்று முழுதாக மக்கள் பங்கு கொள்ளும் இப்போராட்டங்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதியிலும் இராணுவத்தின் பிடியில் உள்ள வடக்கு-கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் இடம்பெறுகின்றன.

வன்னிப் பகுதியில் இடம்பெறும் போராட்டங்கள் நேரடியாகப் பாரிய தாக்கங்களை சிறிலங்கா அரசுக்கோ, இராணுவத்தினருக்கோ ஏற்படுத்தாவிட்டாலும் இராணுவக்கட்டுப்பாட்டில் இடம்பெறும் இவ்வாறான போராட்டங்கள் இராணுவத்திற்கும் அரசாங்கத்திற்கும் நெருடலாகவே அமைந்து வருகின்றன.

தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் அரச நிர்வாகம் முழுமையாக இடம்பெறும் பகுதியில் தமக்கு எதிரான போராட்டங்களில் பொதுமக்கள் உணர்வு பூர்வமாக ஈடுபடுவதை அவர்களால் ஜீரணிக்க முடிவதில்லை.

இவ்வாறான நிலைப்பாடு போர் நிலவிய காலத்தில் வெகுவாகக் காணப்பட்டாலும் சமாதானச் சூழ்நிலை நிலவும் இன்றைய காலகட்டத்திலும் இந்நிலையில் இராணுவத்தினர் மத்தியிலோ, அரசின் மத்தியிலோ மாற்றம் இல்லை.

தற்போதைய சமாதான காலத்திலும் தமிழ் மக்களுக்கு எதிரான அநீதிகள் இழைக்கப்படும் போதும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான அநீதிகள் அரச படைகளால் இழைக்கப்படும் போதும் மக்கள் தங்கள் எதிர்ப்புப் போராட்டங்கள் மூலமே தமது எதிர்ப்பு உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர்.

ஆர்ப்பாட்டப் பேரணி, மறியல், கதவடைப்புப் போராட்டம் என பல்வேறு பட்ட ரீதியில் இந்த எதிர்ப்புப் போராட்டங்கள் அமைகின்றன.

ஆனாலும் மக்களின் உணர்வு பூர்வமான இப்போராட்டங்களை நசுக்குவதற்கு அரசும், அதன் படைகளும் தம்மாலான முழு முயற்சிகளையும் செய்யவே விளைகின்றன.

இதில் இராணுவத்தினரும், பொலிசாரும், சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினரும், தமிழ் தேசவிரோதக் குழுக்களும் முழுமையாக ஈடுபட்டு வருகின்றன.

இச்சம்பவங்களுக்கு அண்மையில் வவுனியாவில் இடம்பெற்ற கதவடைப்பு போராட்டத்தின் போது நடந்த விடயங்களை உதாரணமாக எடுத்துக் கூறலாம்.



சர்வதேசக் கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் சரக்குக் கப்பலை புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மாறாக சிறிலங்கா கடற்படையினர் வழிமறித்துத் தாக்கி அழித்த சம்பவத்தைக் கண்டித்தும் அச்சம்பவத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட போராளிகளுக்கு வீர வணக்கம் தெரிவித்தும் வவுனியாவில் பூரண கதவடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கதவடைப்பினை அனுஷ்டிக்கக் கூடாது எனவும், வவுனியா மாவட்டத்தில் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இயல்பு நிலையைக் குழப்பும் வகையில் ஏதோவொரு அமைப்பு செயற்படுவதாகவும் அவ்வமைப்பின் வேண்டுகோளை ஏற்றுக் கதவடைப்பை அனுஷ்டிப்பது சட்ட முரணானது எனவும் அவ்வாறு செயற்படுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கதவடைப்பு அனுஷ்டிக்கப்பட்ட தினத்திற்கு முதல் நாளும், அன்றைய தினமும் படையினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர்.



அத்துடன் வர்த்தக நிலையங்களை மூடுமாறோ அல்லது அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டாம் என்றோ யாராவது தடுத்தால் உடனடியாகப் பாதுகாப்புப் படைத் தலைமை அலுவலகத்திற்கு அறிவிக்குமாறும் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது.

ஆனால் உண்மையில் படையினரின் இந்த அறிவிப்பைப் பொருட்படுத்தாது முழு அளவில் அன்றையதினம் கதவடைப்பு அனுஷ்டிக்கப்பட்டது.

நகரின் மத்தியிலும் நகரை அண்டிய பகுதிகளிலும் மேலதிக பொலிசார் குவிக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஆயினும் பாடசாலைகளுக்கு மாணவர்களோ ஆசிரியர்களோ செல்லவில்லை. அலுவலகங்களும் இயங்கவில்லை. அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன.

வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக கறுப்புக் கொடிகளும், மாவீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்தும் பதாதைகளும் கட்டப்பட்டு போராட்டம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

ஆனால் இவ்வளவுக்கும் மேலாக இப்பகுதியில் அரசியல் பணியில் ஈடுபடச் சென்ற விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் வன்னிப்பகுதிக்கு அழைக்கப்பட்டு மக்கள் மத்தியில் இனம் புரியாத ஒரு அச்சம் நிலவிய நேரத்தில் இப்போராட்டம் நடத்தப்பட்டது.

விடுதலைப்புலிகள் வன்னிப் பகுதிக்கு வந்தவுடனேயே அப்பகுதிகளில் தலைமறைவாக இருந்த தேசவிரோத சக்திகளும், சிறிலங்கா புலனாய்வுத் துறையினரும் நேரடியாகவே மக்களை அச்சுறுத்திய நிலையிலும் போராட்டம் முழுமை பெற்றது என்பது உண்மை.

" நாங்களே எங்களுக்கு பாதுகாப்பாக ஆயுதங்கள் எதுவும் இல்லாது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று அரசியல் பணி செய்கின்றோம். மக்களை அச்சுறுத்தும் ஆயுதங்களுடன் நடமாடும் படையினருக்கு முன்பு அவர்களின் கடும் எதிர்ப்பின் மத்தியில் பொதுமக்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டதானது மக்கள் விடுதலைப்புலிகள் மீது கொண்டுள்ள பற்றையும் நம்பிக்கையையுமே வெளிக்காட்டுகின்றது'' என்று கூறுகின்றார் வவுனியா மாவட்ட துணை அரசியல்துறை பொறுப்பாளர் செங்கதிர் அவர்கள்.

ஆகவே விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவான இந்த மக்கள்சக்தியினை நசுக்குவது என்பது அரசாலோ அரச படைகளாலோ முடியாத காரியம்.

அவர்களின் முன்பே மக்கள் அவர்களின் முகத்தில் கரியைப் பூசுவது போன்று தமது உணர்வு பூர்வமான செயற்பாடுகளை வெளிப்படுத்தவே செய்வார்கள்.

மக்களின் உணர்வுகளையும், அவர்களின் போராட்டங்களையும் நசுக்க முனையும் அரசுக்கும் அதன் படைகளுக்கும் இவ்வாறான சம்பவங்கள் சாட்டை அடியாகவே அமையும்.

இனிமேலும் மக்களின் உண்மை நிலையைப் புரிந்து கொண்டு இவர்கள் அடங்கி இருக்க தவறுவார்களானால் மேலும் இது போன்ற 'கரிபூசும்' சம்பவங்களில் மக்கள் ஈடுபடத் தவறவே மாட்டார்கள்.

**ஜெயக்குமார்**

---

## தாச்சி, கபடி போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(அலுவலக செய்தியாளர்)

வன்னிமாவட்ட விளையாட்டுத் துறையால் நடாத்தப்பட இருக்கின்ற தாச்சி, கபடி போட்டிக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 30ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஏற்கனவே பொறுப்பாளர்கள் ஊடாகப் பதிவுகளை மேற்கொண்டோர் அதற்கான விண்ணப்பங்களை அந்தந்தப் பகுதி விளையாட்டுத்துறைப் பொறுப் பாளர்களிடம் பெற்றுக்கொள்ளுமாறும்,

பதிவுகளை இதுவரை மேற்கொள்ளாத கழகங்களும் எதிர் வரும் 30ஆம் திகதிக்கு முன்னதாகப் பதிவு செய்து கொள்ளுமாறும் வன்னி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (அ)

## ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்டுள்ள யுத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

லிப்ரன் சதுக்கத்தில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தினை "ஈராக் மீதான யுத்தத்திற்கு எதிரான சங்கம்'' ஏற்பாடு செய்திருந்தது.பாராளுமன்ற உறுப்பினர் பத்தேகம சமித்ததேரரின் தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

## வண்ணத்துப்பூச்சிகளைச் சேகரித்த இரு ஜேர்மனியர்களுக்கு அபராதம்

(கொழும்பு)

மொனராகலையில் உள்ளூர் வண்ணத்துப் பூச்சிகளின் அருகி வரும் இனங்களை சேகரித்த இரு ஜேர்மனியருக்கு நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது.

மொனராகலையில் சட்ட விரோதமாக வண்ணத்துப்பூச்சிகளைச் சேகரித்துக் கொண்டிருந்த சமயம் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இரு ஜேர்மனியர்களும் தங்களது குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளனர்.

இந்த வண்ணத்துப்பூச்சிகளை கொண்டுசென்று இவற்றின் மரபணுக்களைப் பயன்படுத்த ஜேர்மனியர்கள் முற்பட்டுள்ளனர்.

# கடலிலும் தரையிலும் களமாடி வாழ்ந்ததுவே இவரது வரலாறு

## கப்பல் கப்டன் சிலம்பரசன் குறித்து கேணல் சூசை

**கடற்புலிகளின் அதிகாரிகளில் ஒருவராக இருந்து கடலிலும் தரையிலும் பல சாதனைகள் படைத்து மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும்,பொருளாதார ரீதியாகவும் வழிகாட்டியவர்தான் கப்பல் கப்டன் சிலம்பரசன். இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க கடலில் களமாடியதும்,கடலில் வாழ்ந்ததும்தான் இவரது நீண்ட வரலாறு. தமிழீழ மண்ணுக்கு வந்தபோதும் தமிழீழத்தை மீட்க இவர் களமாடாத நாட்களேயில்லை என கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் ஆழியவளையில் வர்த்தகக் கப்பலில் வீரச்சாவடைந்த 11 மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு வீரவணக்க உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் 1998ல் கடற்புலிகளில் இணைந்து இவர் செயற்பட்டார். தலைவரின் அறிவுறுத்தலின் கீழ் தலைவருடன் தனது மன உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டு தமிழீழ சர்வதேசக் கடற்பரப்பில் கப்பலை வழி நடத்துகின்ற பணியில் ஈடுபட்டார்.

ஆனாலும் இடையிடையே வரும்போது ஓயாத அலை 3 ஆரம்பமான வேளை வெற்றிலைக்கேணி கட்டைக்காட்டுப் பகுதியில் இருந்த கடற்படைத் தளத்தைத் தகர்த்து அளிக்கின்ற நடவடிக்கைக்கு அவர் உறுதுணையாக நின்றார்.1991ம் ஆண்டு இராணுவம் எவ்வாறு கைப்பற்றியதோ அதேபோல 2000ஆம் ஆண்டு கடற்புலிகளின் படகுத்தொகுதியை வழிநடத்தி காலநிலை சீரற்றுக் காணப்பட்ட நிலையிலும் கடற்படைக்கலங்கள் ஒருபுறம்,விமானப்படையினரின் தாக்குதல் போன்றவற்றை எதிர்கொண்டு தலையில் காயமடைந்தபோதும் தாக்குதலைத் திட்டமிட்டதைவிட மிகவும் சிறப்பாக நடாத்தி கடற்புலிகளின் விடுதலைப் போர் வரலாற்றில் புதிய அத்தியாயத்தைப் படைத்தார். கடற்படையினரை, இராணுவத்தை ஓட விரட்டினார். கடலில் மட்டும் இவர் களமாடவில்லை. 1995 ஆம் ஆண்டு யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளராக இருந்த வேளை சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் போது யாழ்ப்பாணத்திலிருந்த விடுதலைப் புலிகளையும் தளபாடங்களையும் கொண்டுவந்து சேர்த்த பெருமை இவரைச்சாரும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட வேளை அரசியல் பொறுப்பாளராக மக்களை மீள் குடியமர்த்து வதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகளான பொருளாதாரம்,மருத்துவம், போக்குவரத்து போன்ற அடிப்படை வசதிகளை கட்டியெழுப்ப மிகவும் பாடுபட்டார். கடற்புலிகளுக்கு ஏற்பட்ட சகல நெருக்கடிகளின் போதும் மிகவும் துணையாக நின்று வழி நடத்தியதுடன் மாத்திரமன்றி தமிழீழத் தேசியத் தலைவரின் நம்பிக்கைக் குரியவராகவும் திகழ்ந்தார். புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட அன்றும் சர்வதேச கடற்பரப்பில் எமது நடமாட்டம் இருந்தமை அனைவருக்கும் தெரியும். அன்றும் கடற்படையின் 16 டோறாக்கள் எமது படகுத்தொகுதியை முற்றுகையிட்டன. நாம் எமது படகில் காணப்பட்ட புலிக் கொடியைக் காட்டியபோது எமது படகின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் ஒருவர் வீரச்சாவடைய ஆறுபோராளிகள் விழுப்புண் அடைந்தபோது கடற்படையுடனும், விமானப்படையுடனும் சமர்புரிந்து வெற்றியுடன் தளம் வந்து சேர்ந்தார். இராணுவத்தால் எமது சரக்குக் கப்பல் மூழ்கடித்தமை சம்பந்தமாக ஆறாம் கட்டப் பேச்சுக்களில் பேசப்படுகிறது.

அரசாங்கமும் கடற்படையும் அரச ஆய்வாளர்களும் எமது கப்பல் சர்வதேச கடற்பரப்பில் நடமாடிய ஒரு எண்ணெய்க்கப்பல் என்பதை அறிவார்களாயினும் அவர்கள் ஆயுதம் கடத்தியதாக விடுதலைப்புலிகள் மீது பொய்ப் பிரச்சாரம் செய்கின்றார்கள்.

நாம் எண்ணெய்க்கப்பலில் ஆயுதங்களைக் கடத்துவதற்கு முட்டாள்களுமல்ல, சர்வதேச ரீதியாக கப்பலோடி அனுபவமற்றவர்களுமல்ல. கடல் வாணிபம் செய்யாதவர்களுமல்ல.

இருந்தும் எப்படியாவது இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் குழப்பவேண்டும். விடுதலைப்புலிகளுக்கு ஆத்திரமூட்டிப் போருக்கு இழுக்கவேண்டும் என்கின்ற நோக்கில் சர்வதேச கடற்பரப்பில் வைத்து எமது எண்ணெய்க் கப்பலைத் தாக்கியழித்துள்ளனர். அதுமாத்திரமல்ல எமது 11 போராளிகளினதும் வீரச்சாவுக்கும் காரணமாக இருந்துள்ளனர். இந்த மண்ணுக்காக, எமது மக்களின் சுபீட்சத்திற்காக அயராது பாடுபட்டு வந்த இந்தப் போராளிகளை இந்தக் கடற்படையினரின் அராஜகத்தினால் இழந்து துயருற்றிருக்கும் இவ்வேளையில் அவர்களின் சிந்தனைகளை, பணிகளை செயல்வடிவமாக்க யாவரும் முன்வரவேண்டும் என்றார். (சோ.லோ)

# நாம்பெற்ற வெற்றிகளுக்கெல்லாம் மறைமுகக் கதாநாயகர்கள் இவர்கள்

## 11 மாவீரர்கள் வீரவணக்க நிகழ்வில் தமிழினி

(அலுவலக செய்தியாளர்)

"நாங்கள் பெற்ற வெற்றிகளுக்கெல்லாம் மறைமுகக் கதாநாயகர்களாக இருந்தவர்கள் இவர்கள். இந்த மாவீரர்கள் இன்று ஆழக்கடலில் தம்மை ஆகுதியாக்கி, கலந்து சமாதானத்திற்கு விலைகளாகியிருக்கின்றனர். இவ்வாறு நேற்று முன்தினம் திருவையாற்றில் நடைபெற்ற புலிகளின் வர்த்தகக் கப்பல் மீதான தாக்குதலின்போது வீரச்சாவடைந்த 11மாவீரர்களின் வீரவணக்க நிகழ்வில் உரையாற்றிய தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி அவர்கள் தெரிவித்தார்.

அவர் அங்கு உரை நிகழ்த்துகையில்; தமிழ் மக்களுக்கு இது வசந்தகாலம்,ஆனால் இன்னமும் என்னவோ இலைகள் உதிர்ந்து கொண்டுதான் .இருக்கின்றன. இலைகள் மட்டுமல்ல இடையிடையே உள்ள பெரிய கிளைகள் கூட முறிந்துவிடுகின்றன. ஆனாலும் நாங்கள் வேருக்கு நீரை விட்டுக்கொண்டிருப்போம். இந்த விடுதலைப் போராட்டத்தின் நீண்ட வரலாற்றில் நாங்கள் பெரும் விலைகளைக் கொடுத்து இந்த உயர்ந்த கட்டத்திற்கு வளர்ந்து வந்திருக்கின்றோம். நாங்கள் கொடுத்த விலைகள் யுத்தகாலத்தில் மட்டுமல்ல ஒவ்வொரு காலமும் சமாதானம் என்று எங்கள் மக்கள் மூச்சுவிடும் பொழுதெல்லாம் அது ஒரு நிம்மதிப்பெரு மூச்சாக மட்டும் இருக்கவில்லை. அந்த மூச்சு விம்மலாகவும், வேதனையாகவும் தான் இருந்து கொண்டிருக்கிறது.

எங்களுடைய வரலாற்றின் ஒரு சமாதான காலத்திற்தான் தியாகி திலீபன் அண்ணாவைக் கண்ணுக்கு முன்னால் இழந்தோம் ஒரு சமாதான காலத்தின் வசந்த நாட்களில்தான் எங்களுடைய பெரும் தளபதிகளான குமரப்பா, புலேந்தரன் உட்பட பன்னிரு வீரர்களை நாங்கள் அவலமாகப் பறிகொடுத்தோம். அப்படியான சாமாதானக் காலத்திற்தான் இன்று நாங்கள் பதினொரு மாவீரர்களை இழந்து நிற்கின்றோம். இவர்கள் சாதாரண மனிதர்கள் அல்ல. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கையில் தனக்காகவே வாழ்ந்துகொண்டிருக்கிறான். தன்னைப்பற்றியே கனவுகளைக் கண்டுகொண்டிருக்கிறான். தனக்கு வெளியே சிந்திக்கத் தெரியாத - தனக்கு வெளியே கற்ப னைகளைச் செய்ய முடியாத - தான் செய்யும் எந்தக் கற்பனைக்குள்ளும், தான்வரையும் எந்தத் திட்டத்திற்குள்ளும் பிரதானமாக ஒரு மனிதன் தன்னையே பார்க்கின்றான். ஆனால் உங்களின் முன்னால் இந்த நிழல் படங்களில் இருந்துகொண்டு இருக்கும் இந்த மனிதர்கள் தங்களுக்கு வெளியே வாழ்ந்தவர்கள்.

நாங்கள் வென்ற போர்களுக்கெல்லாம் மறைமுகமான கதாநாயகர்களாக இவர்கள் இருந்தார்கள். அது ஆனையிறவில் நடந்த யுத்தமாக இருந்தாலும்சரி வன்னிப் பெருநிலப்பரப்பில் ஆக்கிரமித்திருந்த யுத்தத்தை முறியடித்த எதிர்ச்சமராக இருந்தாலும் சரி அந்த வெற்றிகளுக்குப் பின்னால் இருந்த கதாநாயகர்கள் இந்த மாவீரர்கள். இன்று ஆழ்கடலில் தம்மை ஆகுதியாக்கி கலந்து இந்த சமாதானத்திற்குத் தங்களை விலைகளாக்கி இருக்கிறார்கள் இவர்கள் என மேலும் தெரிவித்தார். (அ)

# வடமராட்சி கிழக்கில் மாவீரர் துயிலும் இல்லம் திறப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சிகிழக்கு மாவீரர் துயிலும் இல்லம் நேற்று முன்தினம் காலை 11.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டுள் ளது.

பொதுச்சுடரினை வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தீபன் 3 மாவீரர்களின் தாயாரான திருமதி கிறிஸ்ரீன் அம்மா தில்லைநாயகம் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக்கொடியினைத் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம் ஏற்றிவைத்தார்.

மாவீரர் பணிமனை துணைப் பொறுப்பாளர் அர்ச்சனா தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. தலைமையுரையினைத் தொடர்ந்து சிறப்புரையினைப் பொன்தியாகம் நிகழ்த்தினார். (சோ.லோ,11)

# சுகாதார வைத்திய சேவை அமைச்சின் சுகாதார சிகிச்சைக்களம்

வடக்கு கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சினால் ஏப்ரல் 4ம்,5ம் நாட்களில் கிளிநொச்சியில் நடமாடும்"மக்கள் சுகாதார சிகிச்சைக்களம்" ஒன்றை நடாத்த முன்வந்துள்ளது. இச்சிகிச்சைக்களத்தில் 30க்கு மேற்பட்ட மருத்துவ நிபுணர்கள் இதயம், நீரிழிவு நோய்,கண்,காது, மூக்கு ஆகியவற்றிற்கு மருத்துவ சிகிச்சை அளிக்கவுள்ளனர்.

- வவுனியா நகரப்பகுதியில் -

# வீதிக்குறியீடுகள் தெளிவின்மையால் பாதசாரிகள் பெரும் சிரமம்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் உள்ள வீதிக் குறியீடுகள் தெளிவாக இல்லாமையால் பாதசாரிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

வவுனியாவின் நகர்ப்பகுதியில் உள்ள பிரதான வீதிகளில் பாதசாரிகள் வீதியைக்கடக்கும் குறியீடுகள் தெளிவற்று இருக்கின்றன. இதனால் வாகன ஓட்டுநர்கள் இப்பகுதியினை அடையாளம் காண முடியாமையினால் வேகமாக வாகனங்களைச் செலுத்துகின்றனர். இதனாலேயே பாதசாரிகள் வீதிகளைப்பாதுகாப்பாகக் கடக்க முடியாமல் பெரும்சிரமப்படுகின்றனர். குறிப்பாக வவுனியாமாவட்ட அரச செயலகம்,மாவட்ட வைத்திய சாலை, இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்ஆகியவற்றிற்கு முன்பாக உள்ள வீதிக்குறியீடுகளே அழிந்துள்ளன. இதனால் நோயாளர்களும் மாணவர்களும் பெரும் கஷ்ரத்தை எதிர்நோக்குகின்றனர். இதனால் வீதி விபத்துக்கள் ஏற்படக் கூடிய அபாயமும் ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பாக உரிய அதிகா ரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோருகின்றனர். (10)


# கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய பணியாளர் சுப்பிரமணியம் கந்தசாமி அவர்களுடைய அன்புப் புதல்வியும் எமது வித்தியாலய மாணவியும் ஆகிய டனுஷியா கந்தசாமி (16-03-2003) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

இந்த இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இம் மாணவியின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
மு/விசுவமடு.ம.வி.

(2811)

# 45ம் நாள் வீரவணக்கமும் 24வது பிறந்ததினமும்.



நெஞ்சினிலே 1979 . 03 . 23

நெருப்பினிலே 2003 . 02 . 07

கடற்புலி-மேஜர்-சுதன்
கிருஸ்ணசாமி-சதீஸ் (மீசாலை, யாழ்.)

நெஞ்சத்து மேஜர் - நீ
நெடுந்தீவுக் கடற்பரப்பில் - நீ
நெகிழாத நெஞ்சத்துடன்
நெருப்பிலே உடல் வெந்து - எம்
நெஞ்சத்தை வேகவைத்ததால் - தினமும்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ரீரிவால் துயருறும்
இசைபமுதன், குடும்பத்தினர்

(2810)



## சிந்தனைக்கு

அரசியல் என்பது மக்கள்மீது ஆட்சியை நடாத்தும் அல்லது அதிகாரத்தைச் செலுத்தும் விவகாரம் அல்ல; அரசியல் என்பது மக்களுக்குச் சேவை புரியும் பணி, மக்களின் நல்வாழ்வுக்கு ஆற்றப்படும் தொண்டு. - தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 23-03-2003

## நெருக்கடி உருவாகலாம்

வளைகுடாவில் போர் ஆரம்பித்ததைத் தொடர்ந்து இலங்கையின் பொருளாதாரம் பெரியளவில் பாதிக்கப்படுவதற்கான ஏது நிலை தோன்றியுள்ளது. அத்தோடு இனப்பிரச்சினைக்கான தற்போதைய அரசியல்தீர்வு முயற்சிகளுக்கும் அது பாதகமான தொன்றாகவே அமைதலும் கூடும்.

வளைகுடாவில் தற்பொழுது ஆரம்பமாகியுள்ள இப்போரானது உலக நாடுகள் ஒவ்வொன்றையும் ஏதோ ஒரு வகையில் பாதிப்பிற்குள்ளாக்கும் என்பது வெளிப்படையானது. அதிலும் குறிப்பாக இவ்யுத்தமானது ஏதோ ஒரு வகையில் பொருளாதார ரீதியிலான பாதிப்பை விளைவிக்கும் ஒன்றாகவே இருக்கும்.

இந்த வகையில் இலங்கையின் பொருளாதாரமும் கணிசமான பாதிப்பிற்கு உள்ளாகும் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது. வளைகுடாவில் போர் ஏற்பட்டால் அதனால் விளையக்கூடிய பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாகக் கூறிக்கொண்டாலும் அது எந்தளவிற்குச் சாத்தியமானது என்பது கேள்விக்குரியதே.

வளைகுடாப் போரினால், சிறிலங்காவின் பொருளாதாரம் பல்வேறு வழிகளில் பாதிப்பிற்குள்ளாகும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. குறிப்பாக தேயிலை வர்த்தகத்தில் வீழ்ச்சி, பெற்றோலியப் பொருட்களின் பற்றாக்குறை, வளைகுடாப் பகுதியில் இருந்து கிடைக்கும் ஊழியர்களின் வருமானத்தில் வீழ்ச்சி, உல்லாசப் பயணிகள் வருகையில் ஏற்படும் வீழ்ச்சி எனப் பல்வேறு வகையில் இப்பாதிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகைய பாதிப்புக்கள் பொதுப்படையானவையாகவே இருப்பினும் கூட, சிறிலங்கா அரசாங்கம் தற்பொழுது எதிர்நோக்கும் பெரும் பொருளாதார நெருக்கடி - மற்றும் அது எதிர்பார்த்திருக்கும் பெரும் தொகையிலான வெளிநாட்டு உதவி என்பன இவ்யுத்தத்தினால் பாதிப்பிற்கு உள்ளாகும் எனப் பரவலாக எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனை ஜப்பானின் விசேட தூதுவரான யசுசி அகாஷியும் சுட்டிக்காட்டாமலில்லை. ஜப்பானில் சிறிலங்கா அரசிற்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஈராக் மீது ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் காரணமாக டோக்கியோவில் யூன் மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் வெற்றி பற்றி கவலை அடைவதாகத் தெரிவித்தார்.

யசுசி அகாஷியின் கருத்துப்படி ஒருபுறம் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள நாடுகள் பெரும் தொகை நிதியை யுத்தத்திற்கெனச் செலவிடு செய்யவேண்டிய நிலையில் இருக்கையில், அவர்களிடம் இருந்து தமது பொருளாதார அபிவிருத்திக்கென சிறிலங்கா எதிர்பார்க்கும் பெருமளவு நிதி யுதவியை அந்நாடுகள் வழங்குமா என்பது சந்தேகத்திற்குரியதாகவே இருக்கும்.

அதுமட்டுமல்ல, ஈராக் மீதான யுத்தமானது, அந்நாட்டில் பெரும் மனிதாபிமானப் பிரச்சினையைத் தோற்றுவிப்பதாக அமையும் பட்சத்தில், உலகிலுள்ள மனிதநேய அமைப்புக்களின் கவனமானது முற்றிலுமாக ஈராக் நோக்கியதாகவே மாறக்கூடும். இந்நிலையில், இலங்கை குறித்த விடயம் அவர்களின் கவனத்தைக் கவரமுடியாது போகலாம். ஆப்கானிலும் யுத்தம் ஏற்பட்டபோது இத்தகையதொரு சூழ்நிலை ஏற்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது.

இந்நிலையில், ஈராக் மீதான யுத்தம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகளைப் பாதிக்கச் செய்வது தவிர்க்க முடியாததொன்றாகவே இருக்கும். இதன் விளைவானது சிறிலங்கா அரசியலிலும் கூடக் காணப்படக்கூடிய தொன்றாகவும் மாற்றம் பெறக்கூடும்.

அதாவது, நாட்டில் தோன்றும் பொருளாதார நெருக்கடியானது, சமாதான முயற்சிகளைத் தவிர்க்க முடியாது பாதிப்பிற்குள்ளாக்குதல் கூடும். ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகள் சிறிலங்கா அரசிற்குச் சில உறுதிமொழிகளைக் கொடுத்திருப்பினும் யுத்தம் நீடித்தாலோ அன்றி அமெரிக்கத் தரப்பு இழப்புக்களைச் சந்திக்க நேர்ந்தாலோ இவ்வாக்குறுதிகள் கேள்விக்குள்ளாவது தவிர்க்க முடியாததாகலாம்.

ஆகையினால் ஈராக் மீதான அமெரிக்கத்தாக்குதலானது இலங்கையின் பொருளாதாரத்தை மட்டுமல்ல, அரசியல் ரீதியிலும் நெருக்கடியைத் தோற்றுவிக்கக் கூடியதொன்றாக மாறின் அது ஆச்சரியத்திற்குரியதொன்றாக இருக்கமாட்டது.

# ஈராக் மீதான தாக்குதலுக்கு எதிராக வவுனியாவில் கண்டனப் பேரணி

## புஷ்சின் கொடும்பாவியும் எரிப்பு

(வவுனியா செய்தியாளர்)

ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்டுவரும் தாக்குதலைக் கண்டித்தும் அதனை உடன் நிறுத்துமாறு கோரியும் நேற்றுமுன்தினம் வவுனியாவில் மாபெரும் கண்டனப்பேரணி ஒன்று நடாத்தப்பட்டது.

வவுனியா பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கண்டனப்பேரணி நண்பகல் தொழுகையினை அடுத்து பெரிய பள்ளிவாசலிலிருந்து ஆரம்பமானது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கலந்து கொண்ட இக்கண்டனப் பேரணியில், ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்டு வரும் தாக்குதலைக் கண்டித்தும், அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ்சைக் கண்டித்தும்,ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைனையும், ஒசாமா பின்லேடனையும் வாழ்த்தியும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. அத்துடன் ஜோர்ஜ் புஷ்சின் கொடும்பாவியும் எடுத்துச் செல்லப்பட்டது.

கண்டனப் பேரணி மாலை 2.00 மணிக்கு ஆரம்பமாகி கடைவீதியூடாக நகர்ந்து மணிக்கூட்டுக் கோபுரச்சந்தியை அடைந்து அங்கிருந்து யாழ்.வீதியூடாக வவுனியா மாவட்ட அரச செயலகத்தை வந்தடைந்தது. அங்கு மகஜர் கையளிக்கப்பட்டமையைத் தொடர்ந்து ஜோர்ஜ் புஷ்சின் கொடும்பாவியும், அமெரிக்கத் தேசியக் கொடிகளும் எரியூட்டப்பட்டன. (10)

# இலங்கையில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது

## - பதுக்குவோருக்குஎதிராக நடவடிக்கை எடுக்க கூட்டுத்தாபனம் முடிவு

ஈராக் மீதான தாக்குதல் ஆரம்பித்துள்ள போதிலும் இலங்கையில் எரிபொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது. ஒரு மாதத்திற்குத் தேவையான எரிபொருட்கள் கையிருப்பில் உள்ளதாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தகாம் விமலசேன தெரிவித்துள்ளார்.

வளைகுடாவில் போர் ஏற்பட்டுள்ள போதிலும், அரசாங்கம் எரிபொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்படாத வகையில் ஏற்பாடு செய்துள்ளமையினால், எரிபொருளின் விலையைக் கூட்ட வேண்டிய அவசியமில்லை.

ஏனெனில், கையிருப்பில் எரிபொருள் உள்ள போதிலும் மற்றொரு கப்பலில் எரிபொருள் வந்து கொண்டிருப்பதாகவும் தகாம் விமலசேன கூறியுள்ளார்.

இலங்கையில் எரிபொருட்களைக் கூடுதலான விலைக்கு விற்பனை செய்பவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# மத்திய கிழக்கிலுள்ள இலங்கையர் நலன் கருதி நிதியம் உருவாக்கம்

(கொழும்பு)

மத்திய கிழக்கில் உள்ள இலங்கையர்களின் நலன்கருதி அவசரகால நெருக்கடி நிதியம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஈராக் மீதான யுத்தத்தினால் இலங்கையர்களுக்கு ஏற்படக்கூடிய அபாயத்தைத் தடுப்பதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும்.

அமைச்சர்கள் டிரோன் பர்னாண்டோ, மகிந்த சமரசிங்க ஆகியோர் இதற்கான பிரேரணையைச் சமர்ப்பித்தார்கள்.

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க இந்தப் பிரேரணைக்குரிய அங்கீகாரத்தை வழங்கியுள்ளார்.

அவசரம் ஏற்படும் பொழுது மத்திய கிழக்கில் இருந்து இலங்கையர்களைப்பாதுகாப்பான இடம் ஒன்றுக்குக் கொண்டு செல்வதற்கும் நிதியம் உதவியாக இருக்கும்.

இலங்கைக்கு இவர்களை அழைத்து வருவதற்கான விமானக் கட்டணத்தை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கட்டட வசதியின்மை, ஆசிரியர் பற்றாக்குறை அடிப்படை வசதியின்றி பளை ம.வி

(அலுவலக செய்தியாளர்)

அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் கிளி.பளை மத்திய கல்லூரி இயங்கிவருகின்றது.

கடந்த 2000 ஆம் ஆண்டு 1200 மாணவர்கள் இப்பாடசாலையில் கல்வி கற்றனர். தற்போது 800 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இராணுவ நடவடிக்கை மூலம் பாடசாலைக்கட்டடம் , தளபாடங்கள், விஞ்ஞான ஆய்வு கூடம் என்பன முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் 25 வகுப்புக்கள் நடத்தக்கூடிய கட்டடங்கள் இருந்தன. தற்போது 15 வகுப்பிற்கான கட்டடங்கள் மட்டுமே உள்ளன. இவையாவும் தற்காலிக கட்டடங்களாகவே உள்ளன.

கல்விப் பொதுத்தராதர உயர்தர கணிதப்பிரிவு, வர்த்தகப்பிரிவு, விஞ்ஞானப்பிரிவு,கலைப்பிரிவு என்பன உள்ள இப்பாடசாலைக்கு 35 ஆசிரியர்கள் தேவையான நிலையில் 24 பேர் மட்டுமே கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

# மீளக்குடியமர்ந்தோருக்கு 2ஆம் கட்டக் கொடுப்பனவு

(அலுவலக செய்தியாளர்)

மீளக்குடியமர்ந்து வரும் மக்களுக்கு 'நிக்கொட்' திட்டத்தினூடாக 25,000 ரூபா கொடுப்பனவில் - பத்து' மில்லியன் ரூபாய் இரண்டாம் கட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டக்கொடுப்பனவு 400 குடும்பங்க ளுக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக நிக்கொட் நிறுவனக் கணக்காளர் தெரிவித்துள்ளார்.

இதில் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவில் உமையாள்புரத்தில் 71 குடும்பங்களுக்கும், முரசுமோட்டையில் 120 குடும்பங்களுக்கும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் அத்தாய் கிராமத்தில் 10 குடும்பங்களுக்கும், கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் பெரியபரந்தன் 127 குடும்பங்களுக்கும் திருவையாறு மேற்கு கிராமத்தில் 72 குடும்பங்களுக்கும் இவ்வார இறுதிக்குள் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக அவர்தெரிவித்துள்ளார். (அ)

# 10 மூடை நெல் கொள்வனவு

வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒரு விவசாயியிடம் இருந்து 10மூடை நெல்லைக்கொள்வனவுசெய்கின்து.

கமக்கார அமைப்பு ரீதியாக ஒவ்வொரு விவசாயியிடமிருந்தும் ஒரு மூடை தொளாயிரத்து நாற்பத்தைந்து ரூபாவீதம் பத்து மூடை நெல்லினைக் கொள்வனவு செய்கின்றது. (05)

# கண்டாவளைப் பிரதேசத்தில் மெய்வல்லுநர் இறுதிப்போட்டி

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான இறுதி மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 24,25,26 ஆகிய மூன்று தினங்களிலும் பரந்தன் இளைஞர் வட்ட மைதானத்தில் நடைபெறவுள்ளது. இறுதி நாள் 26ஆம் திகதி பிப 1.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வில் கிளிநொச்சி அரச அதிபர் திரு இராசநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார் என கண்டாவளைப் பிரதேச விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் ஆனந்தராஜ் அறிவித்துள்ளார். (14)

-வடக்கு -கிழக்குப் புனரமைப்பு-

# சர்வதேச நிதி உதவிகளுக்கு வரிச் சலுகை வழங்கக் கோரிக்கை

(கொழும்பு)
வடக்கு -கிழக்கு மாகாணத்தில் புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்களை மேற்கொள்வதற்காக கிடைக்கும் வெளிநாட்டு உதவிகள், கடன்களுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரியில் இருந்து வரிவிலக்கு அளிக்கக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் திணைக்கள நிர்வாக செலவினங்களுக்கான வீதத்தையும் மட்டுப்படுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிடைக்கின்ற உதவிகளில் முப்பது சதவீதம் வரியாகவும் நிர்வாக செலவினமாகவும் சிறிலங்கா அரசைச் சென்றடைவதால் எழுபது சதவீதமே உதவியாகச் சென்றடைவதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

## இலவச சத்திரசிகிச்சை இன்று நடைபெறும்

(அலுவலக செய்தியாளர்)
யாழ். போதனா மருத்துவ மனையின் சத்திர சிகிச்சை நிபுணர்களால் இன்று புதுக் குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் இலவச சத்திரசிகிச்சை நடைபெறவுள்ளது.

சத்திரசிகிச்சையை மேற் கொள்ளவுள்ள நோயாளர்கள் இன்று புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனைக்கு சமுகமளித்து சிகிச்சை பெற்றுக்கொள்ளும் வண்ணம் புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் வைத்தியசாலை நிர்வாகத்தினர் வேண்டியுள்ளனர். (சோ. லோ)

## பதிவு செய்க

(ஒட்டுசுட்டான்)
ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சகல வாகன உரிமையாளர்களும் தங்களது வாகனங்களை தங்கள் கிராம அலுவலரிடம் பதிவு செய்து கொள்ளுமாறு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் கேட்டுக் கொள்கின்றார். (05)

## 'கொமன் வெல்த்' பிரதிநிதிகள் யாழ். உத்தியோகபூர்வ விஜயம்

(யாழ்ப்பாணம்)
பொதுநலவாய அமைப்பின் பிரதிநிதிகள் நால்வர் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ். குடாநாட்டிற்குச் சென்றுள்ளனர்.

தற்போதைய சமாதான சூழலில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் நிலைமைகளை நேரடியாகக் கண்டறியும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளில் மக்களின் ஆர்வம் குறித்து அறிந்து கொள்வதற்காகவே இவர்கள் யாழ்ப்பாணம் சென்றுள்ளனர்.

## ஜெயசூரிய ராஜினாமா!

(கொழும்பு)
சிறிலங்கா கிரிக்கெட் அணியின் தலைவர் பதவியை சனத் ஜெயசூரிய ராஜினாமா செய்துள்ளார்.

இது சம்பந்தமான கடிதத்தை அவர் விளையாட்டுத்துறை அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளார்.

இந்த ராஜினாமாக் கடிதத்தை அமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளாரா என்பது பற்றி இதுவரை அறிவிக்கப்படவில்லை.

## வட-கிழக்கில் ஜூன் 28 இல் உள்ளூராட்சித் தேர்தல்

வட-கிழக்கில் யூன்மாதம் 28ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடாத்த நடவடிக்கை எடுக்கப்படுமென்று சிறிலங்காவின் பிரதித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இத்தேர்தலை நடத்துவதற்கான ஆயத்தங்களை மே மாதத்தில் இருந்து ஆரம்பிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## சிலாபம் கடலில் குளிக்கச் சென்ற இரு இளைஞர்களைக் காணவில்லை

சிலாபம் கடலில் குளிக்கச் சென்ற இரு இளைஞர்களைக் காணவில்லையென சிறிலங்காப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் முதல் காணாமல் போனதாகவும் இவர்கள் நீரில் மூழ்கிப் பலியாகி இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.


தமிழீழ மாணவர் அமைப்பின் ஆதரவில்

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் சஞ்சிகை நிறுவனம் நடாத்தும்

**கணினி கருத்தமர்வு**

இடம் : தமிழீழ மாணவர் அமைப்பு, நடுவப்பணியகம் பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி.

காலம் : 24.03.2003 தொடக்கம் 28.03.2003 வரை

நேரம் : தினமும் காலை 9.30 - 12.00, 2.00 - 4.30

ஆசிரியர் :- கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் பிரதம ஆசிரியர் இ.றொபின்சன் செல்வகுமார்

மாணவர்கள், போராளிகள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(2273) தமிழீழ மாணவர் அமைப்பு.


### புலிகள்-முஸ்...

லைப்புலிகளின் சரக்குக் கப்பல் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தச் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் வீடமைப்பு பிரதியமைச்சர் பசீர் சேகுதாவூத் தலைமையில் முஸ்லிம் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளைச் சந்திக்கவுள்ளனர்.

### பெற்றோல்...

மேற்படி சம்பவம் கடந்த வாரம் வன்னேரி ஆனைவிழுந்தான் சந்தியில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி சம்பவத்தில் வியாபார நிலைய உரிமையாளர் ரமேஸ் என்பவரே எரிகாயங்களுக்குள்ளான நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இச்சம்பவத்தில் மனைவியும் பிள்ளையும் பொது மக்களால் காப்பாற்றப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

### விடுதலைப்புலி...

பாக உண்மைக்குப் புறம்பான செய்திகள்,ஊடகங்கள் பலவற்றில் வெளியானதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகளது பிரதிநிதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் திறமை கொமாண்டோப் படையினருக்கு இல்லை என்பது தெரியவந்ததால் வேறு பாதுகாப்புப் பிரிவு ஒன்றை அவர்களின் பாதுகாப்புக்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு ஆலோசனை வழங்கியிருப்பதாகவும் தெரியவருகின்றது.

## இரு பிரிட்டிஷ் ஹெலிகள் வளைகுடாவில் மோதி வீழ்ந்தன!

### பிரிட்டிஷ் - அமெ.படையினர் 7 பேர் பலி


AP PHOTO

(டோகா)
பிரித்தானிய கடற்படைக்குச் சொந்தமான இரு உலங்குவானூர்திகள் நேற்றுக் காலை ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில் ஆறு பிரித்தானிய படையினரும் ஒரு அமெரிக்கரும் கொல்லப்பட்டனர். ஈராக்கிய நேரப்படி அதிகாலை 4.30 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றதாக வளைகுடாவுக்கான பிரித்தானியத் தளபதி தெரிவித்துள்ளார்.

விபத்து நடந்த வேளை இருள் விலகவில்லை என்றும், வளைகுடாவுக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்த வேளையில் இவ்விபத்து இடம்பெற்றதாகவும் இவற்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கு ஆதாரம் எதுவும் இல்லை எனவும் "பென்ரகன்" தெரிவித்தது.

ஒவ்வொரு உலங்குவானூர்தியிலும் தலா மூன்று பிரித்தானியப் படையினர் இருந்தனர். கொல்லப்பட்ட அமெரிக்கர் யார் என்பது குறித்து தெரியவரவில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரித்தானிய கடற்படைக் கப்பலில் இருந்து புறப்பட்டு சர்வதேச கடற்பரப்பில் பறந்துகொண்டிருந்தபோது இவ்விபத்து இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

"கடல் அரசன்" என்று அழைக்கப்படும் இவ் உலங்குவானூர்தி தேடுதல் மீட்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுவதாகும்.

- உலகக்கிண்ண இறுதிப்போட்டி

## அவுஸ்திரேலியா, இந்தியா இன்று மோதுகின்றன!

எட்டாவது உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று தென்னாபிரிக்காவின் ஜொகன்னஸ்பேர்க் நகரில் நடைபெறவுள்ளது.

அவுஸ்திரேலிய அணியும் இந்திய அணியும் உலகக் கிண்ணப் போட்டியொன்றில் முதல் முறையாக இறுதிப் போட்டியில் சந்திக்கின்றன.

இம்முறை உலகக்கிண்ணப் போட்டியின் லீக் மற்றும் சுப்பர் சிக்ஸ் ஆட்டங்களில் அவுஸ்திரேலியா எதிர்கொண்ட அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளது. (பத்துப் போட்டிகள்) இந்திய அணி எதிர்கொண்ட 10 போட்டிகளில் ஒன்பது போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. இவ் இறுதிப் போட்டி குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள அவுஸ்திரேலிய அணித்தலைவர் றிக்கிபொண்டிங் இந்திய அணி வீரர்களின் திறமைகளைக் கருத்திற்கொண்டு இறுதிப் போட்டியை எதிர்கொள்ளவுள்ளதாகக் கூறினார்.

இதேவேளை இந்திய அணித்தலைவர் கங்குலி இலட்சக்கணக்கான ரசிகர்களின் உணர்வுகளை மனதில்கொண்டு இவ் இறுதிப் போட்டியைச் சந்திக்கவுள்ளதாகக் கூறினார்.

இந்திய அணியின் வெற்றிக்காக இந்தியாவில் யாகங்களும் பூசைகளும் நடைபெற்று வருகின்றன.

## தம்மை வட- கிழக்கு சிறைகளுக்கு மாற்ற 32 தமிழ்க் கைதிகள் கோரிக்கை

(கொழும்பு)
களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் 32 பேர், தம்மை வடக்கு- கிழக்கு சிறைச்சாலைகளுக்கு மாற்றுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு விண்ணப்பித்துள்ள இவர்கள் தமது வழக்கையும் வடக்கு- கிழக்கிற்கு மாற்றுமாறு விண்ணப்பித்துள்ளனர்.

இந்த விண்ணப்பங்களை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயக மூர்த்தி சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஒப்படைத்துள்ளார்.

இக்கைதிகளை வடக்கு -கிழக்குச்சிறைச்சாலைகளுக்கு மாற்றி துரிதமாக விடுதலைசெய்ய சட்டமா அதிபர் திணைக்களம் உறுதியளித்துள்ளது.

## கால் நடை அபிவிருத்தி குறித்த பயிற்சிக்கு விண்ணப்பிக்குக

(ஒட்டுசுட்டான்)
ஒட்டுசுட்டான் கால் நடைவைத்தியர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள க.பொ.த. (சாத) 5பாடங்களில் சித்தியெய்திய ஆண், பெண் இருபாலாருக்கும் கால்நடை அபிவிருத்தி தொடர்பான பயிற்சி ஒன்று நடைபெறவுள்ளது.

வவுனியா பூந்தோட்டத்தில் உள்ள கால்நடைத் திணைக்களத்தின் பயிற்சிப் பாடசாலையில் இப் பயிற்சிநெறி நடைபெறும். எனவே இதில் ஆர்வமுடைய இளைஞர்,யுவதிகள் ஒட்டுசுட்டான் அரச கால் நடை வைத்தியபணிமனையுடன் தொடர்புகொள்ளவும். உணவும், தங்குமிடமும் இலவசமாக வழங்கப்படும். அத்துடன் இதற்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும். இது மூன்று நாள் பயிற்சி என்பதுகுறிப்பிடத்தக்கது. விண்ணப்ப முடிவு எதிர்வரும் 30 ஆம் திகதியாகும். (05)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.